செய்தி வெளியீடு எண்—264 நாள்—10.4.2008

# நாங்குநேரியில் 15 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் 70 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கும் பல்துறை பொருள்கள் சார்ந்த முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம்

## முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது

தென் மாவட்டங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுத்திடவும், இளைஞர்களின் வேலைவாய்ப்புகளைப் பெருக்கிடவும், அங்குத் தொழில் முனைவோரை ஊக்குவித்து தொழிற்சாலைகள் அமைப்பதற்கு உதவியாக, பல்வேறு பொருள்களின் உற்பத்திக்கான சிறப்புப் பொருளாதார மண்டலம் ஒன்றினைத் திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் டிட்கோ உதவியுடன் கூட்டு முயற்சியில் நிறுவிட தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் இத்திட்டத்திற்காக அடிக்கல் நாட்டப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2001—2006 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் இத்திட்டத்தைச் செயல்படுத்திட எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

2006 மே திங்களில் மீண்டும் இந்த அரசு அமைந்த பிறகு, இத்திட்டத்தினை ஐதராபாத்திலுள்ள ஏ.எம்.ஆர். கன்ஸ்டிரக்ஷன் மற்றும் கூட்டாளிகள் மூலமாகக் கூட்டுத்துறையில் நிறைவேற்றிட தமிழக அரசு முடிவு செய்தது. இத்திட்டத்திற்குப் போதிய அளவில் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து மத்திய அரசு 2007 மே திங்களில் இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை நிறைவேற்றிட முறைப்படி ஒப்புதல் வழங்கியது. டிட்கோ நிறுவனம் ஏ.எம்.ஆர். குரூப் மற்றும் கூட்டாளிகள் துணையுடன் (ஏ.எம்.ஆர்.எல் இண்டர்நேஷனல் டெக் சிட்டி லிமிடெட்) கூட்டு முயற்சியில் இத்திட்டத்தை நிறைவேற்றும்.

ஏறத்தாழ 2520 ஏக்கர் நிலப்பரப்பில் அமையும் இந்தப் பல்துறை உற்பத்தி சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பெருந்திட்ட அடிப்படையில்,

செய்முறைக்கான நிலப் பரப்பு 1500 ஏக்கர்; செய்முறை அல்லாத நிலப் பரப்பு 1000 ஏக்கர்; பல்பொருள் உற்பத்தி சிறப்புப் பொருளாதார மண்டலமாக இருப்பதால் அனைத்து வகைத் தொழில்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை இச்சிறப்புப் பொருளாதார மண்டலம் அளிக்கும்.

இச்சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் பொறியியல், மருத்துவவியல், வாகன உதிரி பாகங்கள், மின்னணு மற்றும் மென்பொருள்கள், தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில் நுட்பம், மற்றும் பொருள் போக்குவரத்து ஆகியவை தொடர்பான தொழில்களைத் தொடங்கிட தற்போது திட்டமிடப்பட்டுள்ளது. இரண்டு கட்டங்களில் நிறைவேற்றப்படவுள்ள இந்த நாங்குநேரி சிறப்புப் பொருளாதார மண்டலம் 15 ஆயிரம் கோடி ரூபாய் வரை முதலீடுகளை ஈர்க்கும். இத்திட்டம் முழுமையாகச் செயல்படத் தொடங்கும்போது ஏறத்தாழ 70 ஆயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கும். இது, தமிழகத்தில் அமையும் பல்துறைப் பொருள்கள் சார்ந்த முதல் சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலத்தை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் முன்னிலையில், இன்று (10.4.2008) கையெழுத்தானது. இந்த ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் டிட்கோ நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், திரு.எஸ்.இராமசுந்தரம், இ.ஆ.ப., ஏ.எம்.ஆர். கன்ஸ்டிரக்ஷன்ஸ் சார்பில் திரு. ஏ.மகேஷ் ரெட்டி, திரு. பி. ரவிகுமார் ரெட்டி ஆகியோர் கையெழுத்திட்டனர். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மின் துறை அமைச்சர் திரு. ஆற்காடு நா. வீராசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், தலைமைச்செயலாளர் திரு. எல்.கே.திரிபாதி, இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தொழில் துறைச் செயலாளர் திரு. எம்.எப்.பரூக்கி, இ.ஆ.ப. ஆகியோர் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.